THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI
MOST REV. ALBERT ANASTHAS D.D., S.T.D.
Bishop of Kuzhithurai
: 04651 272077
: 9442451130
Bishop's House, Post Box No. 1, Unnamalaikadai - 629179, Kanyakumari District, Tamilnadu, India.

Ref. No: C/24-2026 May 29, 2026

# உலக சுற்றுச்சூழல் தினம்

**அ**ன்பான அருள்பணியாளர்களே, அருள்சகோதரிகளே, இறைமக்களே!

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்களுக்கு உரித்தாகுக!

நம் வாழ்வு சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக, நாம் கேட்காமலேயே இறைவன் பல்வேறு கொடைகளை நமக்குத் தந்தருளியுள்ளார். அவற்றுள் முதன்மையானது இயற்கை. “ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்குக் கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்” என்று தொடக்கநூல் கூறுகிறது. (தொநூ 2:15)

ஆனால் இன்று, காடுகள் மற்றும் மலைகள் அழிக்கப்படுதல், கனிம வளங்கள் சுரண்டப்படுதல், நெகிழிப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்தல், நுகர்வுக் கலாச்சாரம் போன்றவற்றின் வழியாக, மனிதனின் பேராசையாலும், பொறுப்பற்ற தனத்தாலும், கண்டுகொள்ளாமையாலும் இயற்கை பேரழிவின் விளிம்பில் நிற்கிறது.

இச்சூழ்நிலையில், இறைவனின் விருப்பமான “இயற்கையைப் பண்படுத்திப் பாதுகாக்க வேண்டும்” என்னும் உன்னத நோக்கத்தை முன்னிறுத்தி, நம் குழித்துறை மறைமாவட்டத்தில் புதிதாக ஓர் சுற்றுச்சூழல் மையத்தை உருவாக்கியுள்ளோம். இந்த மையம் வரும் நாட்களில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வையும் வழிகாட்டுதல்களையும் முன்னெடுக்கும். புனித பிரான்சிஸ் அசிசியாரின் யூபிலி ஆண்டில் இந்த முயற்சியை முன்னெடுப்பதில் மனநிறைவு அடைகிறேன்.

ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் 5ஆம் நாள், ஐக்கிய நாடுகள் அவையின் வழிகாட்டுதலின்படி, உலகமெங்கும் அகில உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது. நம் மறைமாவட்டத்தில் ஜூன் மாதம் 7ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை, இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா நாளில்,

உலக சுற்றுச்சூழல் தினத்தை நம் பங்குகளில் கொண்டாடுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றேன். அன்றைய தினத்திற்கான வழிபாட்டுக் குறிப்புகளும், மறையுரைக்குப் பதிலான ஆயரின் சுற்றுமடலும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கையைக் காப்போம், நலமாக வாழ்வோம். இறைவனின் ஆசீர் உங்களோடு இருப்பதாக!

**கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,**

**மேதகு ஆயர் ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்,**

**குழித்துறை மறைமாவட்டம்.**

**குறிப்பு:** இத்தகவலை குழித்துறை மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும், கிளைப் பங்குகளிலும் மே 31, 2026 அன்று ஞாயிறு திருப்பலியில் வாசிக்கவும்.

